அன்பளிப்பு

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 06 வியாழக்கிழமை (21-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 25

# பொருளாதாரக் கொள்கை குறித்து அரசாங்கத்துக்குள் பெரும் இழுபறி!

## அளவுக்கு மீறிய யுத்த செலவினம் ஏற்படுத்தியிருக்கும் நெருக்கடி

கொழும்பு, டிசம்பர் 21

எக்கச்சக்கமாக — அளவுக்கு மீறி— அதிகரித்திருக்கும் யுத்த செலவினத்தைச் சமாளிப்பதற்காக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அராசங்கம் கைக்கொண்டுவரும் பொருளாதாரக் கொள்கை அரசுக்குள் பெரும் இழுபறியை ஏற்படுத்தியிருக்கின்றது.

அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் கொள்கையை அரசு தீவிரமாகக் கடைப்பிடிப்பதால் சீற்றமடைந்திருக்கும் இடது சாரிகள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசிலிருந்து வெளியேறப்போவதாக எச்சரித்திருக்கின்றார்கள்.

மக்களுடைய நிறுவனங்களை வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு கையளிக்கும் திட்டத்தை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரிகளான லங்கா சமசமாஜக் கட்சியினரும் கடுமையாக எதிர்க்கின்றனர்.

இந்த விடயத்தில் மக்களுக்கு தேர்தல் காலத்தில் வழங்கிய உறுதிமொழிகளுக்கு முரணாக அரசு செயற்படுகின்றது என அரசில் அங்கம் வகிக்கும் — லங்கா சமசமா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மண்எண்ணெய் லொறிகள் தடுத்து வைப்பு

கொழும்பு, டிச. 21

வடக்கே மண்எண்ணை ஏற்றி வந்த 14 லொறிகள் கடந்த திங்களன்று அநுராதபுரம் ரம்பாவை பகுதியில் வைத்து படையினரால் தடுத்து வைக்கப்பட்டன.

லொறிச் சாரதிகள், கிளீனர்கள் என 28 பேரைக் கைது செய்த படையினர் அவர்களை அநுராதபுரம் மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததாக அறிவிக்கப்பட்டது. (உ-6)

## காரை தீவில் படையினர் குவிப்பு

மட்டக்களப்பு, டிச. 21

அம்பாறை மாவட்டம் காரைதீவில் விசேட அதிரடிப்படையினர் அதிகளவில் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

காரைதீவு பிரதான வீதியி விஷேட அதிரடிப்படையினரின் காவலரண் ஒன்றும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இரவு வேளைகளில் அதிரடிப்படையினர் ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (ஜ-7)

### வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்தோர் பற்றிய

## சந்திரிகாவின் பகிரங்க அறிவிப்பை பொய்யாக்கினார் அரச அதிகாரி!

கொழும்பு, டிச. 21

வலிகாமம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பகிரங்கமாகத் தெரிவித்த ''பொய்க் கணக்கை'' அரசின் பொறுப்பான உயரதிகாரி ஒருவர் வெளியிட்ட அறிவிப்பு அம்பலப்படுத்தியிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தை ஸ்ரீலங்காப் படை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் பஸ் கடத்தல்

மூதூரிலிருந்து சம்பூருக்குச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றை இனம் தெரியாதோர் நேற்று முன்தினம் நண்பகல் கடத்திச் சென்றதாக கிழக்கு பிராந்திய சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மூதூர் மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்கு வரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸே கடத்தப்பட்டது.

## டக்ளஸ் கோரிக்கை

கொழும்பு, டிச. 21

யாழ். குடாநாட்டில் இடம் பெயர்ந்துள்ள அரச ஊழியர்களின் டிசம்பர் மாதச் சம்பளத்தையும், ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுகளையும் உடனடியாக வழங்க மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் நடவடிக்கை எடுங்கள்.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார். (ஜ-3)

## 145 தமிழர் கைது

கொழும்பு, டிச. 21

கடந்த திங்களன்று கொழும்பில் பலபகுதிகளிலும் பொலீஸார் நடத்திய தேடுதல் நடவடிக்கைகளின்

(6 ஆம் பக்கம் பார்க்கா)

### ★ உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன்

# பருத்தித்துறைக்கு வரும் கப்பல்களுக்கே சர்வதேச செஞ். குழு பாதுகாப்புத் தரும்

சாவகச்சேரி, டிச. 21

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறைக்கு வரும் கப்பல்களுக்கு மட்டுமே செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பாதுகாப்பு வழங்கும் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி தெரிவித்தார்.

### காங்கேசனுக்கு வருபவற்றுக்குக் கிடையா

தெற்கில் இருந்து குடாநாட்டு மக்களுக்குரிய பொருள்களை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறைக்கு வரும் கப்பல்களுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு தமது கொடியைப் பறக்கவிட்டு, அதிகாரி ஒருவரைப் பணிக்சமர்த்தி,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தொப்பிகல காட்டில் விமானங்கள் குண்டு வீச்சு!

கொழும்பு, டிச. 21

கிழக்கு மாகாணம் தொப்பிகல காட்டுப்பகுதியில் கடந்த வெள்ளியன்றும், திங்களன்றும் ஸ்ரீலங்கா விமானப் படை விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியதாக அறிவிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கிழக்கு மாகாண தலைமையகத்தை தொப்பிகல காட்டுப் பகுதியில் நிறுவப் போகின்றார்கள் என இராணுவத்துக்கு கிடைத்த புலனாய்வுத் தகவல்களை அடுத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

## பருத்தித்துறைக்கான சேவையை 'லங்காமுடித', 'கல்யாணி' நிறுத்தும்?

### இனி காங்கேசன்துறைக்கே பொருள் ஏற்றி வருமாம்

சாவகச்சேரி, டிச. 21

குடாநாட்டில் உள்ள மக்களுக்கு நிவாரணப் பொருள்களை எடுத்துவரும் பணியில் ... ''லங்கா கல்யாணி'' கப்பல்களின் சேவை இடைநிறுத்தப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

படையினர் கைப்பற்றியுள்ள யாழ்ப்பாணப் பகுதியில் புனரமைப்புப் பணிகளுக்குத் தேவையான பொருள்களையும், கட்டடப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு வார காலத் தாக்குதலில் பங்குபற்றிய

# படையினர் அனைவரும் யாழ். நகரில் தொடர்ந்து நிலை கொண்டுள்ளனராம்

## இராணுவ அதிகாரி தகவல்

கொழும்பு, டிச. 21

யாழ். நகரைக் கைப்பற்றுவதற்கான ஏழு வார காலத் தாக்குதலில் பங்கேற்ற படையினரில் பெரும்பாலானோர் இன்னமும் நகரிலேயே நிலை கொண்டுள்ளனர் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கண்ணி [illegible] பணியில் அவர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்துள்ள பல்லாயிரக் கணக்கான மக்கள் திரும்பி வரும் போது யாழ். நகரத்தைப் பாதுகாப்பான பிரதேசமாக மாற்றும் நோக்கத்துடன் படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாகவும் —

பொதுமக்கள் திரும்பி வருவதற்கு முன்னர், சோதனை செய்யப்படும் பகுதிகளைத் தாம் வரையறை செய்யவுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இராணுவத்தினர் முன்னேறிச் சென்ற சமயம் படைச் சிப்பாய் ஒருவர் ''ஜொனி'' மிதிவெடியில் தவறுதலாகக் காலை வைத்ததால் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த பல வெடிகள் வெடித்ததன் விளைவாய் 19 வீடுகள் இடிந்து வீழ்ந்தன என்றும் —

எல்லா வேளைகளிலும் விடுதலைப் புலிகள் இவ்வாறான புதிய முறைகளைக் கையாண்டதாகவும் இராணுவப் பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## கிளிநொச்சிக்கு லொறியில் ஐ.நா. உதவிப் பொருள்கள்

கொழும்பு, டிச. 21

குடாநாட்டில் இருந்து இடம் பெயர்ந்து வன்னிப் பகுதியில் தஞ்சமடைந்துள்ளோருக்குத் தேவையான உதவிப் பொள்களுடன் 10 லொறிகள் அடங்கிய வாகன அணி ஒன்றை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் நேற்று கிளிநொச்சிக்கு அனுப்பியுள்ளது.

இத்தகவலை அந்த அமைப்பின் அதிகாரிஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

பிளாஸ்டிக் சீற்றுகள், வீடுகளின் மேற் பகுதிக்கான பொருள்கள் என்பனவே அந்த வாகன அணியில் கிளி நொச்சிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## தவறிவிட்டது

தாவடியில் இருந்து 1-11-95 அன்று வரும்போது எனக்கு சுகயீனம் ஏற்பட்டதால் எனது சைக்கிள், சூட்கேஸ், கு.அட்டை, அடையாள அட்டை, அடங்கிய உரப்பை, P.P. பாக் போன்றவை தவறி விட்டன. எடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும்.

வே. கணபதிப்பிள்ளை,
யா/ அரசினர் தமிழ்கலவன் பாடசாலை,
கரம்பகம், மீசாலை.

(39661)

## சிவகணேசன் பட்டுச் சோலை

எமது ஸ்தாபனம் தற்பொழுது இல.3 ,நவீன சந்தை மேல் மாடியில் சாவகச்சேரியில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

★ சுப முகூர்த்த பட்டு புடவைகளுக்கு கைராசி நிறுவனம் ★

(39662)

## தொடர்பு கொள்ளவும்

எமது செயலகத் தேவைக்காக 100 அடி 16 அடி அளவுடைய பனை மரத்தினாலும், (தகரத்தினாலும்) கிடுகுகளினாலுமான தற்காலிக கொட்டகைகளை உடனடியாக அமைப்பதற்கு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம், அரசாங்க ஒப்பந்தகாரர் ஆகியோர் மேலதிக அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

செ. பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

(சி/2913)

## தவறிவிட்டது

புலோலி தெற்கு, உபயகதிர்காமம், கணைவைரவர் கோவிலடியைச் சேர்ந்த கதிரேசு கிருஸ்ணகுமார் என்பவருடைய 720660482 V இலக்க தேசிய அடையாள அட்டையும், தொழில் அட்டையும், வட பகுதிக்குள் நுழைந்த அனுமதி அட்டையும் மந்திகை ஆலடிச் சந்தை முன்பாகவுள்ள வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமோ ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

கதிரேசு கிருஸ்ணகுமார்
உபயகதிர்காமம்,
புலோலி தெற்கு, புலோலி.

[சி/3061]

## பெற்றுக் கொள்ளவும்

க. பொ. த. (உயர்தரம்) சங்கீத செயன்முறைப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை இதுவரை பெற்றுக் கொள்ளாத யா/இராமநாதன் கல்லூரி மாணவிகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இயங்கும் உடுவில் கோட்டத்தில் நாளை காலை பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்
இராமநாதன் கல்லூரி

(39659)

## விமான விபத்து 139 பேர் பலி

கின்ஸாசே, டிச. 21

ஸயர் நாட்டு விமானம் ஒன்று அங்கோலாவின் வட பகுதியில் வீழ்ந்து நொருங்கியது. இந்த விமானத்தில் பயணம் செய்த 144 பேரில் 139 பேர் உயிரிழந்தனர். (இ)

## சீருடை அணியாது வரும் ஆஸ்பத்திரி சிற்றூழியர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர்

மந்திகை, டிச. 21

மந்திகையில் இயங்கி வரும் யாழ். போதனா வைத்திய சாலை நிர்வாகம் சீருடை அணிந்து வராத சிற்றூழியர்களைத் திருப்பி அனுப்பி வருகிறது.

இப்படி சீருடை இன்றி வரும் 20க்கும் குறையாத சிற்றூழியர்கள் தினமும் திருப்பி அனுப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாம் வலிகாமத்தில் இருந்து இடம்பெயரும்போது தமது சீருடைகளை எடுத்துவர அவகாசம் கிடைக்கவில்லை என்று இவர்கள் காரணம் தெரிவிக்கின்றனர்.

அதேசமயம் இந்த வைத்தியசாலையில் தாதி உத்தியோகத்தர்கள் சிலர் சீருடை இன்றி கடமையாற்றுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## 70 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கு அ. அட்டை

எழுபது வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கு அடையாள அட்டைகளை வழங்கும் திட்டம் ஒன்றை சமூக சேவைகள் அமைச்சு அமுல்படுத்தவுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை சகலமாவட்ட செயலகங்களுக்கும் சமூகசேவைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது

இந்த அடையாள அட்டைக்குவிண்ணப்பிப்பதற்கானமாதிரி விண்ணப்பப் படிவம் மற்றும் அற்கான நியந்தனைகள் சம்பந்தமான அறிவுறுத்தல்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஒக்டோபர் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படும் முதியோர் தின வைபவத்தின் போது இந்த அடையாள அட்டைகள் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

## வயிற்றோட்ட நோய் ஓரளவு கட்டுப்பாட்டில்

சாவகச்சேரி, டிச. 21

சாவகச்சேரி, மீசாலைப் பகுதிகளில் வேகமாகப் பரவி வந்த வயிற்றோட்ட நோய் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வயிற்றோட்ட நோய்க்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் தற்போது கணிசமான அளவு குறைந்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்கத்தினர் நடத்தும் வைத்திய நிலையங்களிலும் வயிற்றோட்டத்துக்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை குறையத் தொடங்கியுள்ளது.

(உ-ரி-13-117)

# தொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வு இன்றேல் ஜனவரி முதல் போராட்டம்!

## அரசுக்கு தொண்டமான் எச்சரிக்கை

கொழும்பு, டிச. 21

''தோட்டத் தொழிலாளர்கள் குடியிருக்கும் வீட்டையும், அதனைச் சுற்றியுள்ள காணியையும் அவர்களுக்கே சொந்தமாக்க வேண்டும். இல்லையேல் எதிர்வரும் ஜனவரி முதல் போராட்டங்களை நடத்துவதற்கு நாம் தயாராகி வருகிறோம்.''

இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொகவந்தலாவையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரசு பல வாக்குறுதிகளைத் தந்த போதிலும்— எந்தப் பிரச்சினையையும் தீர்க்க இதுவரை முயற்சிக்கவில்லை. எனவே அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளோம்.

இன்று அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு ஆதரவு வழங்கினாலும் தோட்டத் தொழிலாளர்களைப் பாதிக்கும் எத்தகைய திட்டத்தையும் நாம் எதிர்த்து நிற்போம் என்று அவர் கூறினார்.

## வாகன லைசென்ஸ் பெற எழுத்து மூலப் பரீட்சை

வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பிப்போர் இனிமேல் வீதிப் போக்குவரத்துத் தொடர்பான எழுத்து மூல பரீட்சைக்கு தோற்றவேண்டும்.

இந்த நடைமுறை எதிர் வரும் ஜனவரி முதல் நடைமுறைக்கு வருவதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தமியன் பெவோ கொழும்பில் தெரிவித்துள்ளார். (உ)

## பல்கலைக்கழக மாணவருக்கு உதவிப் பணம்

சாவகச்சேரி, டிச. 21

விரைவில் நடைபெறவுள்ள இறுதிப்பரீட்சைகளைக் கருத்திற் கொண்டு —

இது வரை கொடுப்பனவைப் பெறாத யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை, கலைப்பீட இறுதியாண்டு மாணவர்களுக்கு முதற்கட்டமாக மாணவ உதவிப் பணத்தின் 7 ஆம் 8 ஆம் தவணைக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். பல்கலைக்கழக உப அலுவலகத்தில் இன்று முதல் அலுவலக நாள்களில் 9.30 மணி [illegible] மாணவர்கள் பெற்றுக் கொள்ளலாம். (இ)

## இனப்பிரச்சினை குறித்து ஐ. தே. கவினர் மௌனம்

கொழும்பு, டிச. 21

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஐ.தே.கவின் 41 ஆவது வருடாந்த மாநாட்டில் விசேடமாக ஆராயப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்படும் என தமிழ் மக்களும் தமிழ் அரசியல்வாதிகளும் எதிர்பார்த்திருந்தபோதும் —

அது தொடர்பான எந்த வித முடிவும் எடுக்கப்படாதது குறித்து தமிழ்க் கட்சிகள் கவலை தெரிவித்துள்ளன.

நாட்டின் இன்றைய அதிமுக்கிய பிரச்சினை குறித்து ஐ.தே.க. மாநாட்டில் முக்கிய பிரமுகர் தமது கருத்தை தெட்டத் தெளிவாக வெளியிடாதது கவலையை ஏற்படுத்தியுள்ளது என தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

ஐ. தே. க. நிர்வாக சபைக் கூட்டம் கடந்த சனிக்கிழமையும் —

வருடாந்த மாநாடு ஞாயிற்றுக்கிழமையும் — அதன் தலைமையகத்தில் நடைபெற்றன.

மேற்படி இரு தினங்களிலும் தலைமை வகித்து உரை நிகழ்த்திய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினை குறித்து திட்டவட்டமான கருத்து எதனையும் வெளியிடவில்லை.

''பொருளாதார, அரசியல் அதிகாரங்களை ஸ்ரீலங்கா குடிமக்களுக்கு பகிர்ந்தளிக்கும் அதேசமயம், முக்கிய நிர்வாக அதிகாரங்களை

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உள்ளூர் விமான சேவைத் தடையால்

# விமானப் பயிற்சி நிறுவனங்கள் பல கொழும்பில் இயங்க முடியாத நிலை!

கொழும்பு, டிஸ். 21

கொழும்பில் இயங்கிய விமானப்பயிற்சி நிலையங்கள் பல தமது கிளைகளை வெளிநாடுகளில் நிறுவ முயற்சி எடுத்து வருவதாக ''ஞாயிறு லங்காதீப'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

உள்ளூர் விமான சேவைகளையும், பயிற்சிக்கான விமானப் பறத்தல்களையும் பாதுகாப்புக் காரணங்களுக்காக அரசாங்கம் இடைநிறுத்தி விட்டதை அடுத்தே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அரசின் இந்தத் தடை உத்தரவினால் விமானப் பயிற்சி நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பயிலுநர்களுக்கு உரிய பயிற்சி அளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள முன்னணி விமானப் பயிற்சிப் பாடசாலையான ''ஸ்கை காப்'' (SKY CAB) தனது கிளை ஒன்றை இந்தியாவில் நிறுவுவதற்கான அனுமதியை இந்திய விமானப் போக்குவரத்துத் திணைக்களத்திடமிருந்து கோரியிருப்பதாக ''லங்காதீப'' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த பல விமானிகள் இந்தப் பாடசாலையில் பயிலுநர்களாக உள்ளனர். (ஐ-10)

## போக்குவரத்து வசதி இன்மையால் கொழும்பில் நிற்கும் தீவுப்பகுதி மக்கள்

தீவுப்பகுதிகளைச் சேர்ந்த நானூறுக்கும் அதிகமான மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையில் கடந்த நான்கு மாதங்களாகக் கொழும்பில் தங்கி உள்ளனர்.

வைத்திய சிகிச்சைக்காகவும் மற்றும் அலுவல்கள் காரணமாகவும் ஐரிஸ் மோனா பயணிகள் கப்பல், சேவையில் இருந்த சமயம் கொழும்பு சென்றோரே அங்கு தொடர்ந்து தங்கி உள்ளனர்.

இவர்களை இம்மாதம் 5 ஆம் திகதி தீவுப்பகுதிக்கு அழைத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டபோதிலும், எதுவித நடவடிக்கையும் இது வரை எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. (இ-111)

### மாஹோவில் திரிபோஷா

தென்மராட்சி, டிச. 21

பருத்தித்துறைக்கு வரவுள்ள ''மாஹோ'' கப்பலில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு திரிபோஷா மா பக்கற்றுகள் எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### கெயர் அதிகாரிகள் வடக்கே வருகை

சாவகச்சேரி, டிச. 21

கெயர் இன்ரநஷனல் அமைப்பின் செயற்பாடுகளை விரிவாக்கும் நோக்குடன், அந்த அமைப்பின் அதிகாரிகள் இருவர் வடக்கே வருகிறார்கள்.

கிளிநொச்சி அலுவலகத்துக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள ஆன்லூட்டும், யாழ். அதிகாரியாக நியமனம் பெற்றுள்ள ஹட்ரி அற்சில்லும் எதிர்வரும் 24 ஆம் திகதி கிளிநொச்சிக்கு வருவார்கள் என்றும் —

யாழ். அதிகாரி அடுத்த மாத முற்பகுதியில் இங்கு வந்து சேர்வார் என்றும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## குடும்ப விவரப் பட்டியல் வீட்டு வாசலில் தொங்க விடப்பட வேண்டும்

### மட்டக்களப்பில் படையினர் கெடுபிடி

மட்டக்களப்பு, டிச. 21

மட்டக்களப்பில் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள பிரதேசங்களில் படையினரின் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

ஒவ்வொரு வீட்டு வாசலிலும் அந்த வீட்டில் வசிக்கும் குடும்பத்தின் விவரப்பட்டியல் தொங்க விடப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்காப் படையினர் புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

அத்துடன் கிராமசேவையாளர்கள் மூலம் மட்டக்களப்பில் நிரந்தரமாக வசிப்போரின் விவரங்களையும் படையினர் சேகரித்து வருகின்றனர்.

மேலும் 16 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இராணுவம் வழங்கும் விசேட அடையாள அட்டையைப் பெற வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

### அரச அலுவலகங்களுக்குச் சென்று

## அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள விசேட வசதி

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசசெயலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக யாழ். அரச அதிபர் திரு. செ. பதமநாதன் சில ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

மரணப்பதிவுகளை மேற்கொள்ளவேண்டி உள்ளோர் அவர்கள் தற்சமயம் தங்கி உள்ள அப்பிரிவு கிராமசேவையாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் —

ஆள் அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிப்போர் அவர்களது முன்னைய பிரதேச செயலர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும்—

நிவாரணப் பொருள்கள் சம்பந்தமான விடயங்களுக்கு அவர்கள் தற்பொழுது தங்கியுள்ள பிரதேச செயலர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தல்விடுத்துள்ளார்.

தென்மராட்சியில் தங்கியுள்ள மக்கள் நிவாரணப் பணிகளுக்கென தாங்கள் தற்பொழுது இருக்கின்ற பிரதேசத்துக்கு மேலதிகமாக அமர்த்தப்பட்ட கிராம சேவையாளர்களுடனும் கொடிகாமம்,வரணி கைதடி, சாவகச்சேரி, மட்டுவில் பிரதேச மேலதிக உதவி அரசாங்க அதிபர்களுடனும் தொடர்பு கொள்ளவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி, சாவகச்சேரி வலய மேலதிக உதவி அரச அதிபர்களின் அலுவலகம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், மற்றைய மேலதிக உதவி அரச அதிபர்களின் அலுவலகம் அவ்வப் பிராந்தியத்தியத்திலுள்ள பிரதேச சபை அலுவலகங்களிலும் இயங்குகின்றன. (ஐ-7)

## திரவப் பணத்தை வழங்க நடவடிக்கை எடுக்குக!

### ஜனாதிபதியிடம் கோரிக்கை

சாவகச்சேரி, டிச. 21

''வடபகுதி வங்கிகளின் திரவப்பணம் பற்றாக்குறையினால் பணப்புழக்கத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் உயிர் வாழ்வதற்கு தேவையான திரவப் பணத்தை வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.''

யாழ் மாவட்ட அரச, தனியார் வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர் நலன் காக்கும் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர தந்தியில் இக்கோரிக்கையை விடுத்துள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதத்தில் இருந்து அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் தமது சம்பளத்துக்கு பெற்ற காசோலைகளை மாற்றமுடியாத நிலையில் உள்ளனர். நாளாந்த வாழ்க்கைக்கு வேண்டிய பணத்தைக் கூட வழங்க முடியாத நிலையில் வங்கிகள் உள்ளன —என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தந்திச் செய்தி ஸ்ரீலங்காவில் இயங்கும் அரச, தனியார் வங்கிகள், மத்திய வங்கி, நிதி, பாதுகாப்பு அமைச்சு, சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, செஞ்சிலுவைச் சங்க சர்வ தேசக்குழு, அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஆகியவற்றுக்கும், யாழ்.அரச அதிபர், ஐ. நா. செயலாளர் நாயகம் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (இ...)

### தீர்வுத் திட்டம்: சர்வஜன வாக்கெடுப்பு

கொழும்பு, டிச. 21

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு யுத்தம் பரிகாரமாக அமையாது. அதே போன்று துட்டகைமுனு போன்று இயங்கவும் இயலாது. சமாதானத் தீர்வு யோசனைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து—

அங்கும் ஆதரவைப் பெற்று—பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

—கண்டியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் அமைச்சர் டி.எம். ஜெயரத்தினா இவ்வாறு தெரிவித்தார். (இ-3)

### சித்தாண்டியில் கண்ணி வெடி மீட்பு!

கொழும்பு, டிச. 21

முறக்கொட்டாஞ்சேனை முகாமைச் சேர்ந்த படையினர் கடந்த ஞாயிறன்று காலை வீதிச் சோதனையில் ஈடுபட்ட சமயம் சித்தாண்டிப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த பாரிய கண்ணி வெடி ஒன்றை மீட்டனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்ணிவெடி மீட்கப்பட்டதை அடுத்து அப்பகுதியைச் சுற்றிவளைத்த படையினர் சுமார் 3 மணிநேரம் தேடுதல் நடத்தினர் என்றும் —

இச் சுற்றிவளைப்பின் போது எவரும் கைதாகவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## பெருமளவு ஆயுதங்களை மர்ம விமானம் வீசியது!

### மேற்கு வங்க மாநிலத்தில் பரபரப்பு

கல்கத்தா, டிச. 21

நூற்றுக்கு மேற்பட்ட ஏ. கே. துப்பாக்கிகள் உட்பட பெருந்தொகையான ஆயுதங்களும் வெடிமருந்தும் இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் மர்ம விமானம் ஒன்றிலிருந்து வீசப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சீனாவில் தயாரிக்கப்பட்ட இந்த ஆயுதங்கள் மேற்குவங்கத்தில் வீசப்பட்டதன் மர்மத்தைக் கண்டறிவதில் இந்திய அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

விமானம் ஒன்றில் இருந்து ''பரசூட்டுகள்'' மூலம் இறக்கப்பட்ட இரு மரப்பெட்டிகளில் இந்த ஆயுதங்கள் அடைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர் ஒன்றுக்கு அண்மையில் உள்ள கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை காலையில் இந்த ஆயுதங்களைக் கிராமவாசிகள் கண்டுள்ளனர்.

105 ஏ.கே. 47 துப்பாக்கிகள், 9 ஆயிரம் சுற்று வெடிமருந்து, ஏழு றொக்கட் லோஞ்சர்கள், டாங்கிகளைத் தாக்கும் 60 எரிகுண்டுகள், 36 கைக்குண்டுகள் உட்பட பெருந்தொகையான ஆயுத தளபாடங்கள் அவற்றில் காணப்பட்டன.

தாழ்வாகப் பறந்த – இனங்காணப்படாத – விமானம் ஒன்றில் இருந்து இவை போடப்பட்டிருப்பதாக அப்பகுதி பொலீஸ் உயர் அதிகாரி ஒருவர் கல்கத்தாவில் தெரிவித்தார்.

இந்த விமானம் எங்கிருந்து வந்தது, எங்கே சென்றது என்பது குறித்து அதிகாரிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

இந்த ஆயுதங்கள் பங்களாதேஷுக்கு அனுப்பப்பட்டவையாக இருக்க வேண்டும் என்றும் —

பெட்டிகளில் காணப்பட்ட முகவரி ஒன்று அதற்கு ஆதாரமாய் காட்டப்பட்டிருப்பதாகவும் மேற்குவங்க மாநில உள்துறைச் செயலாளர் தெரிவித்தார். (ஐ)

## பிரார்த்தனை சம்பந்தமான கலந்துரையாடல் இன்று

சாவகச்சேரி, டிச. 21

தமிழினத்தின் விடிவுக்காகவும், விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்காகவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஒரே நேரத்தில் நடைபெறவிருக்கும் ஆராதனை, பிரார்த்தனை ஆகியவை தொடர்பான கலந்துரையாடல்கள் இன்று நடைபெறவுள்ளன.

இக்கலந்துரையாடல்களில் பங்குபற்றும்படி கோவில் குருமார்கள், தர்மகர்த்தாக்கள், பரிபாலனசபையினர் ஆகியோருக்கும் இந்து மன்றங்கள், தொண்டர் சபைகள் ஆகியவற்றைச் சேர்ந்தோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தோருக்கு காலை 10 மணிக்கு உசன் இராமநாதன் வித்தியாலயத்திலும், வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தோருக்கு பிற்பகல் 3.00மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் கலந்துரையாடல் நடைபெறும்.

ஞாயிறன்று காலை 9 மணி தொடக்கம் நடைபெறும் விசேட பூசை, பிரார்த்தனை மற்றும் சமயநற்சிந்தனை நிகழ்வுகள் ஆகியவற்றிலும்—

நண்பகல் 12 மணிக்கு சகல ஆலயங்களிலும் ஒரே நேரத்தில் மணி ஓசை எழுப்பி நடைபெறும் வழிபாட்டிலும் —

கலந்து கொள்ளுமாறு சகல மக்களையும்,ஆலயகுருமாரையும் ஆலய நிர்வாகிகளையும். இலங்கை இந்துமத குருபீடாதிபதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் கேட்டுள்ளார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Yamaha RS 125 (மக்னட்டோ மொடல்) மோட்டார் சைக்கிள், பெண்கள் லுமாலா சைக்கிள், ஆங்கில தட்டச்சு இயந்திரம். தொடர்பு: K. பாலமனோகரன், வீரபத்திரர் ஒழுங்கை, நுணாவில் மேற்கு.
(30647)

### தவறிவிட்டது

சாவகச்சேரியில் இருந்து கொடிகாமம் சென்ற த 6254 இல பஸ்ஸிலிருந்து Baking பவுடர் அடங்கிய பார்சல் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நெல்லியடி சிற்றூர்தி சங்கத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்:- சித்தப்பா.
(39556)

### ஜோதிடம்

மாவை விநாயகர் ஜோதிடம், அதிர்ஷ்டம் அழைக்கிறது. உங்கள் ஜாதக பலன் சரியாகக் கூறப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம், பகல் 12.00 மணி வரை. ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலடி, கரவெட்டி கிழக்கு. பிற்பகல் நெல்லண்டை ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோவில் பிரதம குரு இல்லத்திலும் சந்திக்கலாம்.
(39539)

### இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவீன சந்தையில் இயங்கிவந்த ''ராசி சில்க்ஸ்'' தற்போது கண்டி வீதி, கொடிகாமம் என்னும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (C/3053)


# 30 ஆயிரம் சிங்களவரை யாழ். நகரில் குடியமர்த்துக!

## ஆதிவாசிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, டிச. 21

யாழ். நகரில் முன்னர் வசித்த 30 ஆயிரம் சிங்கள மக்கள் அங்கு மீண்டும் குடியமர்த்தப்படவேண்டும். அதற்கான அழைப்பை அரசு விடுக்கவேண்டும்.

ஸ்ரீலங்கா ஆதிவாசிகளின் சங்கம் அரசாங்கத்திடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

''சூரியப் பிரகாசம்'' நடவடிக்கை மூலம் விடுவிக்கப்பட்ட யாழ். நகரில் மக்களை மீளக்குடியமர்த்தும்போது அங்கிருந்து இடம்பெயர்ந்த தமிழ்மக்களை மட்டுமன்றி முன்னர் அங்கு வாழ்ந்த 30 ஆயிரம் சிங்கள மக்கள் உட்பட முஸ்லிம்கள், பறங்கி இனத்தவர் அனைவரையும் மீளக்குடியமர்த்த வேண்டும் என்று ஆதிவாசிகள் சங்கம் வற்புறுத்தியுள்ளது.
(ஐ-10)

# ஐ.நா. சிறுவர் நிதியத்தின் நிவாரணப் பொருள்கள்

## அடுத்த வாரம் இங்கு வந்து சேரும்

ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் இடம்பெயர்ந்த மக்களுக்காக வழங்கியுள்ள நிவாரணப் பொருள்கள் அடுத்த வாரம் இங்கு வந்து சேரவிருக்கின்றன.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் கொழும்பில் உள்ள யாழ். அரச அதிபரின் அலுவலகத்தில் கையளிக்கப்பட்ட பொருள்களே கப்பலில் எடுத்துவரப்படுகின்றன.

100 மலசலகூட பேசன், 2 ஆயிரத்து 300 பாய்கள், ஆயிரத்து 500 அரிக்கன் லாம்புகள், மற்றும் கூடாரத்துக்கான பொலித்தீன், சவர்க்காரம், தொற்று நோய்த் தடுப்பு மருந்து வகைகள் ஆகியவை இந்த நிவாரணப் பொருள்களில் அடங்கும்.

இந்தப் பொருள்கள் ''மாஹோ'' கப்பலில் ஏற்றப்பட்டு எடுத்துவரப்படுகின்றன.

# வடமராட்சியில் பயிர்கள் அழிகின்றன

வடமராட்சிப் பகுதியில் நெற்செய்கை பெரும் பாதிப்படைந்துள்ளது.

போதிய மழை இன்றி வளர்ந்து வந்த நெற்பயிர்கள் தற்போது காவோலைப் புள்ளி, எரிபந்தம் போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்டு அழியும் நிலையை அடைந்துள்ளன.

இளம் பயிர்கள் எரிந்து போவது மட்டுமின்றி, கதிர் வரும் பருவத்தில் உள்ள பயிர்களும் கூட இந்நோயினால் தாக்கப்பட்டுள்ளன.
(இ-15)

# புதிதாக மயானம்

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் ஆனைவிழுந்தான் பகுதியில் புதிய மயானம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பங்கு மக்கள் இறந்து போகும் உறவினர்களை அடக்கம் செய்ய போதிய இடவசதி இன்மையால் அதற்கென ஓர் இடம் ஒதுக்கித்தருமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. க. சிவசுவாமியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக் கோரிக்கையையடுத்து ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு கிழக்கே 200 யார் தொலைவில் கத்தோலிக்க மக்களுக்கான சேமக்காலைக்கு காணி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
(ஐ-173)

# ஆஸ்பத்திரி ஊழியருக்கு மண்ணெண்ணெய்

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு தலா பத்து லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுவருகின்றது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி தவிர்ந்த ஏனைய ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கு மந்திகை ஆதார வைத்தியசாலையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.
(ஐ-117)

# பாடசாலை சிறுவருக்கு பற்சிகிச்சை

சாவகச்சேரி, டிச. 21

இன்று தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை, பொதுவிடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் பாடசாலைப் பிள்ளைகளுக்கு பற்சிகிச்சை அளிக்கப்படும்.

3 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட பாடசாலைப் பிள்ளைகள் பற்சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் என்று [illegible] சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.
(இ-18)


# மரங்கள், பலகைகள் தேவை

பாவித்த, பாவிக்காத பனை மரங்கள், சலாகைகள் (பல அளவுகளிலும்) மற்றும் பலகைகள் (மா, வேம்பு) தேவை.

விற்க விரும்புவோர் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்

✶ உதயன் பணிமனை,
பருத்தித்துறை வீதி,
(கனகம்புளியடிச் சந்திக்கு அருகில்)
சரசாலை, சாவகச்சேரி.



# ஆண்டுகள் ஆறாகியும் ஆறாத நினைவுகள்



திருமதி
**சரஸ்வதி அம்மா கிருஷ்ணன்**
**21 - 12 - 1995**

''உயிராய், உடலாய், உதிரமாய்
என்னுள்ளே நீயிருக்க பிரிவென்பதேது?''

ஐ. கிருஷ்ணன்

24, இந்திராபுரம்,
முகமாலை.
(சி/2912)



# வைப்பகத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளோர்

சாவகச்சேரி, டிச. 21

பின்வரும் விலாசதாரர்களை கச்சாய் வீதி சாவகச்சேரியில் உள்ள தமிழீழ வைப்பகத்துக்கு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை அறிவித்துள்ளது.

★ செல்வராசா தவமணி அல்லது தனபாலசிங்கம் அஜந்தா — 8/6 'ஏ', சிவன் புதியவீதி, திருநெல்வேலி.

★ பீற்றர் பேரின்பநாயகம் அல்லது பொஸ்ரேஸ் சரோசா — 29, ஏ. வீ. வீதி, கொழும்புத்துறை.

★ திருமதி சிறிஸ்கந்தராசா வளர்மதி— சிவகுல வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

★ சண்முகம் இராசதுரை — இல. 25, சந்திரன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

★ ஆ. சிவராசா— 36, பாரதிவீதி, யாழ்ப்பாணம்.
(ஐ)


## இடம்பெயர்ந்த அதிகாரிகள்

# வேலைக்கு வர வேண்டும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, டிச. 21

யாழ். நகரில் புனரமைப்பு வேலைகளை கூடிய விரைவில் ஆரம்பிக்கவே நாம் விரும்புகின்றோம். இது சாத்தியமாக வேண்டுமானால் அங்கிருந்து இடம்பெயர்ந்த அரசாங்க அதிகாரிகள் அங்கு வேலைக்கு சமுகம் அளிக்க வேண்டும்.

புனர்வாழ்வு, புனரமைப்பு செயலணிக் குழுவின் செயலாளரான எஸ். என். ஜே. சேனரத்தின மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
(இ-3)

# தரக்குறைவான பாண் வீதியோரம் விற்பனை!

சாவகச்சேரி, டிச. 21

தென்மராட்சி சில இடங்களில் தரக்குறைவான பாண் விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. இது குறித்து பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

உரப்பைகளில் கட்டி சைக்கிளில் எடுத்துவரப்படும் இத்தகைய பாணை கூடிய விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதில் சிலர் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாணுக்குத் தட்டுப்பாடு நிலவும் இடங்களில் - அந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தரக்குறைவான பாணை இவர்கள் விற்பனை செய்து வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.
(ஐ-7)

# ஆசிரியர் பயிற்சிக்கு நேர்முகப் பரீட்சை

கொழும்பு, டிச. 21

இரண்டாயிரம் ஆசிரியர்கள் அடுத்த வருடம் ஆசிரிய பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஜனவரி முதல் பகுதியில் நடைபெறும்.

இந்த இரண்டாயிரம் பேரில் 1,500 பேர் சிங்கள மொழி மூல ஆசிரியர்கள். ஏனையோர் தமிழ் மொழி மூல ஆசிரியர்கள்.

விண்ணப்ப முடிவு திகதி டிசம்பர் 31 என்றும், டிசம்பர் முதலாம் திகதிய அரச வர்த்தமானியில் இது தொடர்பான விவரம் வெளிவந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
(இ)

# தமிழர்கள் மோசமாக தாக்கப்பட்டு சித்திரவதை

## பொத்துவில் பகுதியில் சம்பவம்

சாவகச்சேரி, டிச. 21

அம்பாறை, பொத்துவில் ஏற்றம் கிராமத்தில் ஸ்ரீலங்கா விசேட அதிரடிப் படையினர் தமிழ் மக்களை தாக்கி மிக மோசமாக சித்திரவதை செய்து பலரை ஊரைவிட்டு விரட்டியுள்ளனர்.

கடந்த 4ஆம் திகதி ஏற்றம் கிராமத்துக்குச் சென்ற அதிரடிப்படையினர் நடராசா என்பவரின் குடும்பத்தினரை மிகவும் மோசமாகத் தாக்கி சித்திரவதை செய்தனர்.

பின்னர் ஊரைவிட்டு அவர்களை வெளியேற்றினர்.

14ஆம் திகதி மீண்டும் அந்தக் கிராமத்தை சுற்றி வளைத்த விசேட அதிரடிப் படையினர் மக்களைத் துன்புறுத்தியதுடன் மேலும் பலரை அங்கிருந்து வெளியேற்றினர் என்று கூறப்படுகிறது.

சின்னமுத்து தெய்வானை, இராமலிங்கம், அழகையா, நாகேஸ்வரன் ஆகியோரின் குடும்பங்களும், செல்வன் கீர்த்தி, பட்சம் பிரகாஷ், சின்னம்மா, தாண்டசீலன் ஆகிய பாடசாலை மாணவர்களும் வேறு சிலரும் இந்த கிராமத்தை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.


# உடன் தொடர்புகொள்ளவும்

கொக்குவில், தாவடி தெற்கைச் சேர்ந்த திரு. S. கந்தசாமி மானிப்பாய், உடுவில் தெற்கைச் சேர்ந்தசெல்வி நவரடனம் சுலோசனாதேவியை பின்வரும் விலாசத்தில் உடன் தொடர்புகொள்ளவும்.

C/o. சு. அன்னம்மா
''பதுமநிதி''
கைதடி வடக்கு,
கைதடி.
(39704)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதி உயர் பாதுகாப்பு பிரதேசமாக மட்டக்களப்பு பொலீஸ் நிலைய பகுதி

## படையினர் பிரகடனம்

கொழும்பு, டிச. 21

மட்டக்களப்பு கோட்டை முனைப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தீவிரமடைந்திருப்பதை அடுத்து —

மட்டக்களப்பு பொலீஸ் நிலையம், பிரதி பொலீஸ் மா அதிபரின் அலுவலகம், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரின் அலுவலகம் ஆகியவை அமைந்துள்ள பகுதிகள் அதி உயர் பாதுகாப்பு பிரதேசமாக படையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது; இப்பிரதேசம் ஊடான போக்குவரத்தும் தடை செய்யப்பட்டுள்ளது

இதனால் மட்டக்களப்பு நகரின பெரும் பகுதியில் வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி பிரகடனத்தை அடுத்து —

மட்டக்களப்பில் உள்ள திருகோணமலை வீதி, பார் வீதி ஆகியவை ஊடான போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

கல்முனைப் பகுதியிலிருந்து மட்டக்களப்பு நகரை நோக்கி வரும் வாகனங்கள் அரசடிச் சந்தியில் நிறுத்தப்பட்டு, தாமரைக்கேணி வீதி, ஸ்ரேஷன் வீதி, அருணகிரி வீதி, லொயிட்ஸ் அவெனியூ ஆகியவை ஊடாக திருப்பி விடப்படுகின்றன.

இதேபோன்று —

வாழைச்சேனைப் பக்கத்திலிருந்து மட்டக்களப்பு நகரை நோக்கி வரும் வாகனங்கள், ஸ்ரேஷன் வீதி — திருகோணமலை வீதிச் சந்தியில் நிறுத்தப்பட்டு, அருணகிரி வீதி, லொயிட்ஸ் அவெனியூ ஆகியவை வழியாகத் திருப்பி விடப்படுகின்றன.

(உ)

இடம்பெயர்ந்தோரி...

## உணவுப் பாதுகாப்பு நிலை: ஆராயும் கூட்டம் இன்று

சாவகச்சேரி, டிச 21

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் முகாம்களிலும், வெளியிலும் தங்கியுள்ள மக்களின் உணவுப் பாதுகாப்புநிலை குறித்து ஆராயும் கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறையில் கெயர் அமைப்பு அலுவலகத்தில் நடைபெற விருக்கிறது.

முகாம் பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற அமைப்பு பிரதிநிதிகள், செயலக — விவசாய திணைக்களங்களின் அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொள்வர்.

அகதிமுகாம்களின் உணவு நிலை, உணவுப்பற்றாக்குறை, விவசாய முயற்சி ஆகிய விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படும்.

(உ-3)

## தமிழ் இளைஞர் சுட்டுக் கொலை

சாவகச்சேரி, டிச. 21

மட்டக்களப்பு வாழைச்சேனை சம்பன் முகாமுக்கு அருகே தமிழ் இளைஞர் ஒருவர் ஸ்ரீலங்கா பொலீஸாரினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ரூபன் என்ற இந்த இளைஞர் விடுதலைப் புலிகள் இயக்கத்தவர் எனப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

பெரும் பிரயத்தனத்தின் பின்னர் இவரது சடலத்தை உறவினர்கள் மீட்டுள்ளனர்.

(ஐ-7)

## தபாலகத்தில் கொள்ளை

கொழும்பு, டிச, 21

கிழக்கு மாகாணம் கிரான் பகுதியில் உள்ள தபாலகம் அண்மையில் கொள்ளையிடப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது. (உ-6)

## தமிழரான பெண் பொலீஸ் மீது சந்தேகம்

கொழும்பு, டிச. 21

கொழும்புக்கு அண்மையில் உள்ள பொலீஸ் நிலையம் ஒன்றில் பணி புரியும் தமிழ்ப் பெண் பொலீஸ் ஒருவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதை அடுத்து அது குறித்து தேசிய இரகசியத் தகவல் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (உ-6)

## கொடிகாமம் அதிபர்கள் கூட்டம்

சாவகச்சேரி, டிச. 21

கொடிகாமம் வட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு கொடிகாமம் வட்ட அரசியல்துறை செயலகத்தில் நடைபெறவிருக்கிறது என பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## உதயன்

### மண் கௌவுவது சந்திரிகாவே!

குடாநாட்டில் மாகாண சபையின் கீழ் வராத — மத்திய அரசாங்கத்தின்கீழ் இயங்கும் — திணைக்களங்களில் கடமையாற்றும் அரசாங்க ஊழியர்களின் இம்மாதச் சம்பளத்தையும் —

குடாநாட்டில் உள்ள ஓய்வூதியர்களின் இம்மாத ஓய்வூதியத்தையும் — வழங்காமல் இடைநிறுத்துவதற்கு ஸ்ரீலங்கா அரசு முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாகாணசபையில்கீழ் இயங்கும் திணைக்களங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் சம்பளத்தையும் இடைநிறுத்துவதற்கு சந்திரிகா திட்டமிட்டிருந்தார். எனினும் அவரது திட்டம் செயற்படுத்தப்படுவதற்கான உத்தரவு உரிய அதிகாரிகளைச் சென்றடைய முன்னரே, வடக்கு - கிழக்கு மாகாணசபை குடாநாட்டில் தனக்கு கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கான டிசம்பர் மாதச் சம்பளத்துக்குரிய கட்டுநிதியை அனுப்பி விட்டது.

ஆகவே சந்திரிகாவின் அச்சுறுத்தல் அதாவது ''வலை விரிப்பு'' மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள திணைக்களங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு மட்டும் அல்ல அனைவருக்குமே என்பது தெளிவு.

ஸ்ரீலங்கா அரசின் ''சூரியப் பிரகாசம்'' ராணுவ நடவடிக்கையின்போது யாழ். நகர் உட்பட வலிகாமத்திலிருந்து பெரும்பாலும் அனைத்து மக்களுமே இடம்பெயர்திருந்தனர்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது ராணுவ நடவக்கைகள் தொடர்பாக தெற்கிலும் வெளிநாடுகளிலும் பெரும் பிரசாரம் செய்து கடைசியில் கைப்பற்றியது மக்கள் இல்லாத வெற்று நிலத்தையே.

வெற்று நிலத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று குழம்பிக் கொண்டிருந்த சந்திரிகாவுக்கு உதித்த குள்ள நரித் திட்டம்தான் குடாநாட்டு அரச ஊழியர்களின் சம்பளத்தை இடைநிறுத்தும் திட்டம் என்பதில் சந்தேகமில்லை.

அரச ஊழியர்கள் யாழ். நகர் வந்தால்தான் அவர்களுக்குச் சம்பளம் கிடைக்கும் என்றால், அவர்கள் வந்துவிடுவார்கள் என்று சந்திரிகா நம்புகிறார் போலும்.

தனது குள்ளநரித் திட்டம் மூலம் சந்திரிகா இரண்டு காரியங்களைச் சாதிக்க முயற்சிக்கிறார்.

ஒன்று, அரச ஊழியர்கள் சம்பளம் எடுக்க யாழ். வந்தால் அவர்களை மடக்கிப் பிடித்து இராணுவப் பிடிக்குள் சிக்க வைக்கலாம்; அவர்களை அடிமைகளாக்கி காரியத்தைச் சாதித்து விடலாம்.

மற்றது அப்படி அவர்கள் செய்யாவிட்டால் பட்டினியாவது போட்டு அவர்களை பணிய வைக்கலாம்.

ஆனால் சந்திரிகாவின் வலைக்குள் சிக்குவதற்கு தமிழீழ மக்கள் ஏமாளிகள் அல்லர்.

கடந்த காலங்களிலும் இன விடுதலைப் போராட்டத்தில் இப்படி எத்தனையோ பயமுறுத்தல்கள், அச்சுறுத்தல்கள் விடுவிக்கப்பட்டிருந்தன.

இவற்றை எல்லாம் வெற்றி கொண்டவர்கள் தமிழீழ மக்கள். அவர்களின் மன உறுதியும் ஒற்றுமையுமே இந்த வெற்றிக்குக் காரணமாக இருந்தன. ஆகவே தற்போதைய பிரச்சினையிலும் மண் கௌவப் போவது சந்திரிக்காவே.

## முகம் தெரியாத உறவுக்கு ஓர் கடிதம்!

எனக்காக தீக்குளித்த உடன்பிறப்பே!
இனத்துக்காய் உயிர்துறந்த உறவே!
உன் பேரறியேன்...
உன் முகமறியேன்...
சரியான உன் முகவரி, அதுதானும் அறியேன்,
ஆயினும் இதை எழுதுகிறேன். இக்காகிதம் உனக்கு
வந்து சேராது என்பது எனக்குத் தெரியும்; ஆனாலும் — உன்
அர்ப்பணிப்பைக் கூறாமல் இருக்க முடியவில்லை.
எம் தேசத்தின் இளைய தலைமுறை இன்று புதிய விதத்தில்
சிந்திக்கத் தொடங்க வேண்டும் என்பதற்காய்
எழுதுகிறேன் — ஆம்
நீ தீக்குளித்த செய்தி அறித்து திகைத்தேன்!
வேதனையோடு வெடகத்துக்குள்ளே முகம் புதைத்து அழுதேன்.
உனக்காக மட்டுமல்ல என்னையும் எண்ணித்தான்.
பேரறியா உறவே!!
என்னை உனக்குத் தெரியாது
ஆனால் இன்று எனக்கு மட்டுமல்ல உலகத்துக்கே
உன்னைத் தெரிந்துவிட்டது.
என் மனக்கண்களில் நீ நடத்திய யாகம் தெரிகிறது.
நீ எரிகிறாய்...!
நெய்யாக உருகிறாய். .!!
புழுவாக நெளிந்து விழுகிறாய்...!!!
ஐயகோ! நீ படும் வேதனையை என்னால் எண்ணிப்
பார்க்கவும் முடியவில்லையே! ஏன் இந்த வேதனை...?
யாருக்காக இந்தத் தியாகம்...? எனக்காகத் தானே...!
என் உறவுகளுக்காகத்தானே
என் அம்மாவுக்காக, அப்பாவுக்காக,
அக்காவுக்காக, தம்பி, தங்கைக்காக
என் குடும்பத்துக்காக நீ உன்னை வருத்தி
உயிரை விட்டாய்!
ஆனால் நான் மட்டும் இங்கே...!
ஆனால்... ஆனால்...
என் உறவுகளுக்காக உயிர்நீத்த உத்தமனே!
ஏன் இப்படிச் செய்தாய்?... ஓ..,
எனக்குப் புரிகிறது. உனக்கும் ஒரு சொந்த நாடு
இருந்திருக்குமானால் நீ இப்படி யாசித்து
மாண்டிருக்கமாட்டாய்! படை திரட்டி வந்து
தமிழன் யார் என்பதைக் காட்டியிருப்பாய்!
என்னசெய்வது, உலகமெங்கும் பரந்து வாழும்
தமிழனுக்கு ஒரு நாடில்லை, சுதந்திரமாய் குந்தியிருக்க
ஒரு கூடில்லை; தமிழனாகப் பிறந்ததுக்காக நிம்மதியான
வாழ்வில்லை; இந்த அவலநிலையை மாற்றப்போவது
தமிழீழம் தான் என்பதை நீ சரியாகப் புரிந்து கொண்டாய்.
தமிழன் என்றால் உலகில் எந்த மூலையில் வாழ்ந்தாலும்
உணர்வால் ஒன்றுபட்டவன் என்ற தத்துவத்துக்கு நீ
புத்துயிர் ஊட்டிவிட்டாய்.
என் இரத்தத்தின் இரத்தமே!
உன் தேசத்தில் நீ மூட்டிய நெருப்பு உன்னை மட்டும்
எரிக்கவில்லை; தமிழ்க் குலத்தில் எதிரிக்கு கொள்ளி
கொடுக்கும் கோடாரிக் காம்புகளின் போலி முகத்தோலையும்
உரித்துவிட்டது.
எம் தேசத்தின் இளைஞர் யுவதிகளின் நெஞ்சத்திலே
புதிய வேகத்தை ஊட்டிவிட்டது.
இனியும் எம் இளம் தலைமுறை உறங்காது.
விழித்து எழும் - எம் பகை வேருடன் வீழும்.
உன் நினைவு எம் நெஞ்சத்தில் நீங்காது வாழும்

இப்படிக்கு,
தமிழீழத்தின் உடன் பிறப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இட மாற்றம்

நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் பின் வீதியில் P. M. நடாத்திய சோதிட நிலையம் பின்வரும் விலாசத்தில் தற்சமயம் இயங்குகின்றது.

C/o அ. பத்மநாதன்
''தீப வாசா''
சியாமளா மில் ஒழுங்கை,
மீசாலை.
(புத்தூர் சந்திக்கு அருகாமை)

(39702)


# மரண அறிவித்தல்கள்

## இராசதுரை பிரபாகரன்

(யாழ். பல்கலைக்கழகம்)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது மிருசுவிலில் வசித்து வந்தவரும், யாழ். பல்கலைக்கழக நூலக உத்தியோகத்தருமான இராசதுரை பிரபாகரன் அவர்கள் 19-12-95 செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

இவர் காலஞ்சென்ற சி. இராசதுரை, இ. மனோன்மணி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், யாழ். பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மதனாகரன் (கனடா), கருணாகரன் (கொழும்பு மாநகர சபை உத்தியோகத்தர்), தினகரன் (பொறியியலாளர், U. S. A.), பாஸ்கரன் (பொறியியலாளர், ஓமான்), ராஜமனோகரி (அம்பிகா — லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலேஸ்வரி, வசந்தாதேவி, சுமதி, சிவஞானசித்தியார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தயாபரன், அஜந்தி, துஷாந்தி, ரமணாகரன், பிரபாத், றோஜினி, பிரதீபன், ஜெனனி ஆகியோரின் சிறிய தந்தையும், சிந்து, தர்ஷகா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 20-12-95 புதன்கிழமை மிருசுவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மிருசுவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இராஜதுரை மனோன்மணி
[தாயார்]

மே/பா. சுந்தரம் பரமானந்தம்,
மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

(39657)

## திருமதி சிவசம்பு செல்லம்மா

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிவசம்பு செல்லம்மா (20.12.95) நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. சிவசம்புவின் அன்பு மனைவியும், யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி மகேஸ்வரன் புனிதவதியின் அன்புத் தாயாரும், திரு. பொன்னையா மகேஸ்வரன் (கட்டடத் திணைக்களம் — கொக்குவில்) அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள், இன்று 21.12.95 கைதடி நுணாவிலில் (வைரவர் கோவில் வீதியில்) உள்ள இல்லத்தில் பி.ப 12.30 மணியளவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி புனிதவதி மகேஸ்வரன்
(மகள்)

தற்போதைய முகவரி:
க. பேரம்பலம்
வைரவர் கோயில் றோட்,
கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.

(39707)

## துரையப்பா அழகராசா

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் குளப்பிட்டி 'செங்கமல வாசா'வை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா அழகராசா 18 - 12 - 95 இல் காலமானானார்.

இவர் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை முன்னாள் ஊழியரும், ஏழாலை துரையப்பா-இலட்சுமியின் மகனும், வை. சி. சிவகுரு – தையல்நாயகியின் (கனடா) மருமகனும், இராசமனோகரியின் அன்புக் கணவரும், துஷ்யந்தன், பாலராஜா (கொக்குவில் இந்து மாணவர்), திவ்யா (கொ. இ. ஆ பாடசாலை) ஆகியோரின் அருமைத் தந்தையும், அரியமலர், ஆறுமுகம், ரஞ்சிதமலர், இளங்கோவன், பரராசசிங்கம், துரைராசசிங்கம், ஞானமலர், தவராசசிங்கம், காலஞ்சென்ற ஜெயராசசிங்கம் ஆகியோரின் சகோதரரும், சரஸ்வதி, மனோகரி, துரைராசா, கமலேஸ்வரி ஜெயரட்ணம், கமலாதேவி சண்முகநாதன், கோகிலமனோகரி வரதராசா, சிவமனோகரன் (கனடா), சத்தியகுமாரி சண்முகரட்ணம், ஹரிமனோகரன் (கனடா), சிவமனோகரி நந்தகுமார், திலகமனோகரி பாலகுமார், கலாரஞ்சினி சிறீதரன், கலைவாணி, கருணாகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19 - 12 - 95 இல் பெரியபளையில் நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

திருமதி இ. அழகராசா,
C/o ஐ. செல்வரத்தினம்,
பெரியபளை, பளை.

(39658)

# கிழக்கில் தமது பலத்தை புலிகள் திரட்டுகின்றனர்!

## பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, டிச. 21

கிழக்கில் தமது பலத்தை ஒன்று திரட்டும் முயற்சியில் விடுதலைப் புலிகள் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'ராய்ட்டர்' செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

சிறப்புப் பயிற்சி பெற்ற சுமார் ஐந்நூறு விடுதலைப் புலிகள் வாகரை மற்றும் வெருகல் பகுதியில் இரண்டு முகாம்களை அமைத்துள்ளனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வாகரையில் நவீன தொடர்பு சாதனங்களைக் கொண்ட இரு மாடிக் கட்டடம் ஒன்றில் விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதியின் முக்கிய பணிமனை அமைக்கப்பட்டிருப்பதாகவும் —

கடந்த சில தினங்களாக அது துரிதமாகச் செயற்பட ஆரம்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் எட்டுப் பேர் கடல் மார்க்கமாக வெருகல் பகுதிக்குச் சென்றிருப்பதாகவும் —

கடற்புலிகளின் தாக்குதல் பிரிவின் யுத்த தளபாடங்களும் வெருகல் பகுதிக்கு மாற்றப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

வடக்கில் இழந்துள்ள தமது ஆதிக்கத்தை கிழக்கில் ஏற்படுத்துவதற்காக கிழக்கில் வெகு விரைவில் விடுதலைப் புலிகள் புதிய தாக்குதல்களை ஆரம்பிக்க வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### பொருளாதார...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜக் கட்சியைச் சேர்ந்த — எம்.பியான வாசுதேவ நாணயக்கார தெரித்தார்.

அரச தோட்டங்களை தனியார் மயப்படுத்தும் அரசின் திட்டத்தை தமது கட்சி கடுமையாக எதிர்ப்பதாகவும்—

இந்தப் பிரச்சினையால், அரசுக்கு அளிக்கும் ஆதரவை தமது கட்சி மீளாய்வு செய்ய வேண்டியுள்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது அரசு கடைப்பிடிக்கும் வழி எங்களுக்குப் பொருத்தமற்றது என்றும் அவர் சொன்னார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த நான்கு எம். பிக்கள் உள்ளனர் அவர்களில் ஒருவர் அமைச்சர் பேர்னாட் சொய்ஸா, மற்றவர் பிரதி அமைச்சர் அத்தாவுட செனிவிரத்ன, வாசுதேவ நாணயக்காராவும் பற்றி வீரக்கோனும் ஏனைய இருவர்களுமாவர்.

நாடாளுமன்றத்தில் ஒரேயொரு உறுப்பினரை மட்டும் மேலதிக பலமாகக் கொண்டிருக்கும் சந்திரிகா அரசுக்கு லங்கா சமசமாஜக் கட்சி எம். பிக்கள் நால்வரினதும் ஆதரவும் அத்தியாவசியம் என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டணியில் உள்ள மற்றைய கட்சிகளின் கடும் ஆட்சேபத்தையும் மீறி, அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தும் திட்டத்தை செயற்படுத்தும் நிர்ப்பந்தத்துக்கு அரசு தள்ளப்பட்டிருப்பதற்கு வடபகுதி யுத்தம் முக்கிய காரணமாகும் என்று பிரபல பத்திரிகையாளர் விக்ரர் ஐவன் தெரிவித்துள்ளார்.

இந்த யுத்தத்திற்கு தினசரி ஐந்து கோடி 25 லட்சம் ரூபா செலவாகுகின்றது.

இதனால் இலங்கையின் பொருளாதாரம் வரவரச் சீர்குலைந்து செல்கின்றது. அது விரைவில் ஸ்தம்பிக்கும். அரசு அதனைச் சீராக்க முயற்சிக்கவில்லை.

உல்லாசப் பயணிகள் வருகை குறிப்பிடும் அளவுக்குக் குறைந்துள்ளது; நத்தார் கால பரபரப்பு மக்களிடம் இல்லை. வியாபாரம் களைகட்டவில்லை. மக்கள் மத்தியில் பணப்புழக்கம் குறைந்துள்ளது. யாழ். யுத்தத்திற்காக அரசு பெருமளவு திறைசேரி உண்டியல்களை விநியோகித்து மக்களிடம் கடன்பட்டுள்ளது.

பணம் உள்ளவர்கள் அபிவிருத்தித் திட்டங்களில் பணத்தை முதலீடு செய்யாது —கூடிய பயன் கருதி— திறைசேரி உண்டியல்களை வாங்குகின்றனர். அதனால் பொருளாதாரம் மேலும் பின்தள்ளப்படுகின்றது.

பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அரசிடம் திட்டம் ஏதும் இருப்பதாகவும் தெரியவில்லை. இந்நிலைமை நீடிப்பின் பயங்கரமான கட்டம் தோன்றும். மக்கள் கொந்தளிப்பர்; எதிர்காலம் இருள் மயமாகும்— இவ்வாறு விக்ரர் ஐவன் மேலும் குறிப்பிட்டார். (உ6)

---

### 145 தமிழர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது 145 தமிழர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் இருந்து வந்தோரே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக கொழும்பு பிரதி பொலீஸ்மா அதிபர் டி. எம். டி. திஸநாயக்கா தெரிவித்தார். (உ 6)

---

### சந்திரிகாவின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் கைப்பற்றிய பின்னர் ஜனாதிபதி செயலகத்தில் உள் நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்களைச் சந்தித்த போது குடாநாட்டின் சனத்தொகை குறித்து ஜனாதிபதி சந்திரிகா 'புதுக் கணக்கு' ஒன்றை வெளியிட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

அந்த விதண்டாவாதக் கணக்கின்படி, வலிகாமத்தில் இருந்த மொத்த சனத்தொகை வெறும் ஒரு லட்சம் மட்டுமே என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் யாழ்ப்பாணத்தைப் புனரமைப்பது என்ற பெயரில் அவரால் அமைக்கப்பட்ட — யாழ்ப்பாண புனரமைப்பு, புனர்வாழ்வுக்கான ஜனாதிபதி செயலணிக் குழுவின் — செயலாளர்' ஜனாதிபதியின் கூற்றின் உண்மைத் தன்மையை இப்போது அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

இந்த செயலணிக் குழுவின் செயலாளராக சந்திரிகாவால் நியமிக்கப்பட்டவர் தேசிய நல்லிணக்க அமைச்சின் மேலதிக செயலாளரான எஸ்.எம். ஜினதாச சேனரத்ன யாழ். மாவட்டத்தில் முன்னர் சுங்க அதிகாரியாகப் பணிபுரிந்தவர்.

யாழ்.புனரமைப்பு குறித்து பி.பி.ஸிக்கு அவர் நேற்று பேட்டியளித்தார்.

அப்பேட்டியில் —

வலிகாமத்திலிருந்து சுமார் மூன்றரை லட்சம் மக்கள் வெளியேறியுள்ளனர் என்றும் —

அவர்களில் சுமார் ஒரு லட்சம் பேர் வடமராட்சி, தென்மராட்சி, பளைப் பகுதிகளிலும், எஞ்சிய இரண்டரை லட்சம் பேர் பெருநிலப்பரப்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் இடம்பெயர்ந்து தங்கியிருக்கின்றனர் என்றும் —

ஜினதாச சேனரத்ன தெரிவித்திருக்கின்றார்.

புனர்வாழ்வு, புனரமைப்புக்கு பொறுப்பான அரச அதிகாரி வலிகாமத்திலிருந்து மூன்றரை லட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளதாகக் கூறியிருப்பது —

வலிகாமத்தில் ஒரு லட்சம் பேரே இருந்தனர் என்ற சந்திரிகாவின் பொய்க் கூற்றை அம்பலப்படுத்தியிருக்கின்றது.

---

### இனப்பிரச்சினை...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசு வைத்திருக்க வேண்டும். இதுவே இனப்பிரச்சினைக்கான எமது கட்சியின் தீர்வு யோசனையாக இருக்கும்.'' — என்று அவர் மேலோட்டமாகக் கூறினார்.

---

### பருத்தித்துறைக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்களையும், அங்குள்ள மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் எடுத்துவருவதற்கு இவ்விரு கப்பல்களையும் பயன்படுத்த புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு முடிவு செய்துள்ளதாகவும்—

இதன் காரணமாக குடாநாட்டின் ஏனைய பகுதிகளான வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள மக்களுக்கான நிவாரணப் பொருள்களை எடுத்து வரும் பணியில் இவ்விரு கப்பல்களும் ஈடுபடா என்றும்—

தெரிவிக்கப்பட்டது.

---

### பருத்தித்துறைக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு வழங்கி வருகிறது.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கும் இடையில் ஏற்பட்ட முத்தரப்பு உடன் படிக்கையின் படியே மேற்படி கப்பல்களுக்கு இத்தகைய பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருவதாகவும் —

இருந்த உடன் படிக்கையின்படி பருத்தித்துறைக்கு வரும் கப்பல்களுக்கே தமது அமைப்பு பாதுகாப்பு வழங்கும் என்றும் — செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படும் 3 ஆயிரம் பேருக்காக கப்பல் மூலம் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள், புனரமைப்புக்கான கட்டடப் பொருள்கள் ஆகியவை காங்கேசன்துறைக்கு எடுத்து வரப்படும் என்று அரசு அறிவித்திருந்தது தெரிந்ததே.

அரசு மேற்படி பொருள்களை கப்பல்கள் மூலம் காங்கேசன்துறைக்கு எடுத்து வரும் முயற்சியில் ஈடுபட்டால், அந்தக் கப்பல்களுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு தனது பாதுகாப்பை அளிக்க மாட்டாது எனத் தெரியவருகின்றது.

[உ-3]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 21-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org